## FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066983

1. District : மாவட்டம் சேலம் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு சேலம் | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 7/AC/2019 | Date: நாள் 19-3-2019

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனைச் சட்டம் | Sections பிரிவுகள்: 409, 465, 468 and 471
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 | Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a).
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 2016 | Date to : நாள் வரை 2018
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் – | Time to : நேரம் வரை –
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12-3-2019 | Time : நேரம் –
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19-3-2019 | Time : நேரம் 1800 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக 7-12-2018 அன்று தெரிவிட்ட திரு சோதனை அலுவலக (Proceedings) அறிக்கையின் பேரில்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 10 கி.மீ வடமேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மேட்டூர் அரசு மருத்துவமனை, மேட்டூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. சந்திரமௌலி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. M. சுந்தரம் செட்,
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2019 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation தொழில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர். | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை. சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. டாக்டர் V. சத்யா தலைமை மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை மேட்டூர்.
   2. திரு. N.T. சோலைராஜன் உதவியாளர், தலைமை மருத்துவ அலுவலர் அலுவலகம் அரசு மருத்துவமனை, மேட்டூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   அனுமதி பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/3/19.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.3.2019 at 0930 hrs.

Name: பெயர் ...S. சந்திரமௌலி
Rank: நிலை ......................No. எண் ........
குற்றவியல் காவல் சார்பு ஆய்வாளர்
உ.ம.த.க. பிரிவு. கோவை.

சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 19.03.2019ஆம் தேதி 18.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது கடந்த 07.12.2018ஆம் தேதி முற்பகல் 11.45 மணி முதல் இரவு 19.30 மணி வரை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கூடுதல் காவல் கண்காணிப்பாளராகிய நான், திருமதி.V.K.சாந்தி, தனிதாசில்தார் (நில எடுப்பு) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம், சேலம் மற்றும் சேலம் துணை ஆய்வுக்குழு அலுவலர் பொறுப்பு, திரு.எஸ்.ராஜூ, ஆய்வுக்குழு ஆய்வாளர், காவல் ஆய்வாளர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் ஓமலூர் வட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் திடீர் சோதனை மேற்கொண்டபோது சாட்சிகள் முன்னிலையில் தயாரிக்கப்பட்ட எனது நடவடிக்கைகளின் பேரில் வழக்கு பதிவு செய்ய அனுமதி கோரப்பட்டு அதன்பேரில், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களது கமுக்க நமுனா எண். SC No.4418/2019/MED/SL, Dated.26.02.2019ல் வழங்கப்பட்ட உத்தரவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்சொன்ன திடீர் சோதனையின்போது தயாரிக்கப்பட்ட நடவடிக்கையின் சுருக்கம் மற்றும் அதன் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:

கடந்த 07.12.2018ஆம் தேதி ஓமலூர் அரசு மருத்துவமனையில் அங்கு பணிபுரியும் மருத்துவர்கள், அலுவலர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் ஊசி போடவும், எக்ஸ்-ரே எடுக்கவும், பிரசவம் பார்க்கவும், அறுவை சிகிச்சை செய்யவும், ஊனமுற்றோர் சான்று வழங்கவும் மற்றும் பல்வேறு காரணங்களுக்காவும் வரும் பொது மக்களிடம் கையூட்டாகப் பணம் கேட்டு பெறுவதாகக் கிடைத்த நம்பத்தகுந்த ரகசியத் தகவலின்படி, சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கூடுதல் காவல் கண்காணிப்பாளராகிய நான், திருமதி.V.K.சாந்தி, சேலம் துணை ஆய்வுக்குழு அலுவலர் பொறுப்பு, திரு.எஸ்.ராஜூ, ஆய்வுக்குழு ஆய்வாளர், காவல் ஆய்வாளர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் அன்று காலை 11.45 மணி அளவில் திடீர் சோதனை செய்தபோது, மேற்படி மருத்துவமனையில் மருத்துவர்கள், செவிலியர்கள், இதர பணியாளர்கள் பணியில் இருந்தது தெரிய வந்தது. மேலும், கையூட்டு சம்பந்தமாக விசாரணை நடத்தியதில் பொது மக்கள் யாரும் கையூட்டு அளித்ததாக புகார் அளிக்க முன் வரவில்லை. மேலும், மேற்படி மருத்துவமனை உதவியாளர் திரு.என்.டி.கோவிந்தராஜ் என்பவரிடம் திட்டப்பதிவேடுகள் குறித்து விசாரித்ததில், அவர் State Health Society, Tamil Nadu என

அச்சிடப்பட்டும், அதன் மேல் scheme ledger என்ற ஆவணத்தை ஆஜர் படுத்த அந்த ஆவணத்தை பரிசீலித்ததில் 1) PWS United fund, 2) PWS Interest, 3) JSSK Fund, 4) LSCS Diet, 5) Hiring of Specialist, 6) NCD Staff Nurse, 7) 24 HDCS Staff Nurse, 8) Cemong Centre Drugs, 9) Operation Theatre Contingencies, 10) PN Mother Diet Charges, 11) BIO Medical Waste Management, 12) Kayakalpam Scheme, 13) Amma Arogya Thittam, 14) RMNCH Staff Nurse Salary, 15) Case Management((Mosquito Net, Mosquito proofing) ஆகிய திட்டங்களுக்கு 2016ஆம் ஆண்டு முதல் பெறப்பட்ட தொகை செலவிடப்பட்ட தொகை, இருப்புத்தொகை ஆகிய விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவற்றை ஆய்வு செய்ததில் JSSK திட்டத்தில் கர்பிணிப் பெண்களை பிரவசத்திற்குப் பின்பு அவர்களது வீட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான செலவிற்காக நபர் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதும், 31.08.2016 முதல் 31.08.2018 வரை மேற்படி திட்டத்தில் ரூ.1,56,250/- மட்டும் செலவு செய்யப்பட்டதாக தெரிவித்து 31.8.2016, 30.9.2016, 31.10.2016, 30.11.2016, 30.12.2016, 31.1.2017, 28.2.2017, 31.3.2017, 28.4.2017, 31.5.2017, 30.6.2017, 31.7.2017, 31.8.2017, 28.9.2017, 31.10.2017, 31.11.2017, 29.12.2017, 31.1.2018, 28.2.2018, 28.3.2018, 30.4.2018, 31.5.2018, 30.6.2018, 31.7.2018, 31.8.2018 மற்றும் 28.9.2018 ஆகிய தேதிகளிட்ட செலவினச்சீட்டுகளை (வவுச்சர்) ஆஜர் செய்தார். மேற்படி வவுச்சர்களை ஆய்வு செய்ததில், பெரும்பாலும் திரு.சி.ராஜா என்ற ஒரே நபர் மூலம், பலதரப்பட்ட பதிவெண்கள் கொண்ட வாகனங்கள் மூலம் மகப்பேறு பெற்றவர்களை அவர்களது இல்லத்தில் விட்டதற்கான போக்குவரத்து செலவு செய்ததாக கேஷ் வவுச்சர்கள் தயாரித்துள்ளதும், அந்த செலவு தொகை ஓமலூர் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவ அலுவலர் டாக்டர் வி.சத்யா என்பவரால் தன்காசோலைகளாக அதற்குரிய அரசு வங்கிக்கணக்கிலிருந்து பணமாக்கப்பட்டு, ராஜா மற்றும் சிலருக்கு வழங்கப்பட்டதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. மேற்படி கேஷ் வவுச்சர்களில் சிலவற்றில் ராஜாவின் கையொப்பம் இல்லாமலும், சிலவற்றில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கையொப்பம் கொண்டதாகவும் இருந்தது. மேற்படி கேஷ் வவுச்சர்களில் காணப்பட்ட ராஜா என்பவரை மருத்துவமனை அலுவலர்கள் மூலம் தொடர்பு கொண்டு விசாரித்ததில், அவர் சரிவர பதிலளிக்காமல் தொடர்பை துண்டித்துவிட்டார். எனவே, மேற்படி செலவினச்சீட்டுகள் முறைப்படி தயாரிக்கப்படாமல் போலியான கையெழுத்துக்களுடன் தயாரிக்கப்பட்டு அந்த செலவினச்சீட்டுகளில் குறிப்பிடப்பட்ட தொகைகள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருப்பது

தெரியவந்தது. எனவே, மேற்சொன்ன செலவின சீட்டுகள் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், கீழ்கண்ட பட்டியலில் கண்ட குறிப்பிடப்பட்ட Chief Minister's Comprehensive health Insurance Consumable Account என்ற திட்டத்தில் சுமார் 35 காசோலைகள் மூலமாக அத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியானது 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் பல்வேறு தரப்பட்ட தேதிகளில் காசாக்கப்பட்டு அதில் ஒரு பகுதி கையாடல் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சாத்தியக்கூறுகள் இருப்பதாக மேற்படி காசோலைகள் சம்மந்தப்பட்ட செலவினச்சீட்டுகளை பரிசீலனை செய்ததில் தெரியவந்தது.

**Chief Minister's Comprehensive Health Insurance Scheme Consumable Account**

| S.No | Cheque Number | Date | Amount |
|---|---|---|---|
| 1. | 433877 | 15.09.2017 | 135000 |
| 2. | 973694 | 01.09.2017 | 129455 |
| 3. | 973686 | 21.08.2017 | 43273 |
| 4. | 433875 | 21.08.2017 | 135000 |
| 5. | 433876 | 21.08.2017 | 135000 |
| 6. | 433874 | 21.08.2017 | 135000 |
| 7. | 973681 | 11.08.2017 | 15422 |
| 8. | 973680 | 11.08.2017 | 26454 |
| 9. | 433870 | 10.07.2017 | 135000 |
| 10. | 973656 | 27.06.2017 | 9935 |
| 11. | 433865 | 08.06.2017 | 135000 |
| 12. | 433864 | 08.06.2017 | 135000 |
| 13. | 973641 | 08.06.2017 | 69090 |
| 14. | 973610 | 21.03.2017 | 119700 |
| 15. | 433855 | 21.03.2017 | 270000 |
| 16. | 717869 | 24.08.2015 | 19950 |
| 17. | 033935 | 24.04.2018 | 51000 |

| | | | |
|---|---|---|---|
| 18. | 739017 | 26.10.2017 | 94920 |
| 19. | 033890 | 12.12.2017 | 18605 |
| 20. | 033876 | 26.10.2017 | 14755 |
| 21. | 433881 | 09.10.2017 | 135000 |
| 22. | 433882 | 23.10.2017 | 135000 |
| 23. | 033914 | 09.02.2018 | 135000 |
| 24. | 966488 | 12.12.2017 | 23200 |
| 25. | 966464 | 21.08.2017 | 20000 |
| 26. | 739014 | 23.10.2017 | 46292 |
| 27. | 739015 | 23.10.2017 | 79682 |
| 28. | 033902 | 02.01.2018 | 59832 |
| 29. | 033804 | 25.07.2018 | 12744 |
| 30. | 033942 | 24.04.2018 | 7560 |
| 31. | 033787 | 24.04.2018 | 18500 |
| 32. | 033928 | 04.04.2018 | 135000 |
| 33. | 033944 | 24.04.2018 | 135000 |
| 34. | 033789 | 24.04.2018 | 35686 |
| 35. | 033788 | 24.04.2018 | 48505 |

அதேபோல், கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட Chief Minister's Comprehensive health Insurance Infrastructure Account என்ற திட்டத்தில் 12 காசோலைகள் மூலமாக பணம் பெறப்பட்டு கையாடல் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சாத்தியக்கூறுகள் உள்ளதும் தெரியவந்தது.

**Chief Minister's Comprehensive Health Insurance Scheme Infrastructure Account**

| S.No | Cheque Number | Date | Amount |
|---|---|---|---|
| 1. | 619556 | 07.05.2015 | 45056 |

| | | | |
|---|---|---|---|
| 2. | 966472 | 03.10.2017 | 105000 |
| 3. | 033816 | 15.09.2018 | 57000 |
| 4. | 033800 | 15.06.2018 | 14500 |
| 5. | 033783 | 04.04.2018 | 17920 |
| 6. | 966489 | 02.01.2018 | 17920 |
| 7. | 033814 | 12.09.2018 | 39535 |
| 8. | 966492 | 02.01.2018 | 28336 |
| 9. | 033915 | 14.02.2018 | 6304 |
| 10. | 033813 | 12.09.2018 | 85000 |
| 11. | 033796 | 18.05.2018 | 29727 |
| 12. | 033786 | 24.04.2018 | 27110 |

மேற்படி பட்டியல்களில் கண்ட செலவினச்சீட்டுகளும், மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. இதர விபரங்கள் அந்த திடீர் சோதனையின்போது தயாரிக்கப்பட்ட **07.12.2018**ஆம் தேதியிட்ட எனது நடவடிக்கையில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

ஆகையால், எதிரிகள் மீது சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2019 u/s 409, 465, 468, 471 IPC and Sec.13(2) r/w 13(1) (a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் அசலினையும், **07.12.2018**ஆம் தேதியிட்ட நடவடிக்கை குறிப்பையும் (Proceedings) கனம் தனிநீதிபதி, சிறப்பு நீதிமன்றம், ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள் விசாரணை நீதிமன்றம், சேலம் அவர்களுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியும் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

19/3/19.

கூடுதல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.